ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை -06.

பத்திரிகைச் செய்தி

2023-2024 ஆம் ஆண்டிற்கான இடைநிலை ஆசிரியர் தேர்வுக்கான ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அறிவிக்கை எண்.01/2024, நாள் 09.02.2024-ன்படி 21.07.2024 அன்று ஒளியியல் குறி அங்கீகாரம் (Optical Mark Recognition (OMR) மூலம் தேர்வு நடத்தப்பட்டது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்கு எண்: WMP No.16353 of 2024 and batch cases தீர்ப்பாணை நாள்: 18.03.2025-ற்கிணங்க, மேற்காணும் போட்டித் தேர்வில், **Part- B-ல் தமிழ் மொழி வினாக்கள் கொண்ட "A" வகை வினாத்தாளுக்குரிய** கேள்விகளுக்கான தற்காலிக உத்தேச விடைக்குறிப்புகள் (Tentative Answer Key) ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளமான www.trb.tn.gov.in-ல் வெளியிடப்பட்டுள்ளன.

ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள தற்காலிக உத்தேச விடைக்குறிப்பின் மீது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் தேர்வர்கள் 28.03.2025 முதல் 03.04.2025 பிற்பகல் 5.00 மணி வரை ஆசிரியர் தேர்வு வாரிய இணையதள முகவரியில் மட்டுமே ஆதாரங்களுடன் பதிவு செய்திடல் வேண்டும். தபால் அல்லது பிறவழி முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது. அவை நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும். அங்கீகரிக்கப்பட்ட பாடப்புத்தகங்கள் (Standard Text Books) ஆதாரம் மட்டுமே அளிக்க வேண்டும். கையேடுகள்(Guides, Notes) ஆதாரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தேர்வர்கள் TRB website-ல் வெளியிடப்பட்டுள்ள **Part- B-ல் தமிழ் மொழி வினாக்கள் கொண்ட "A" வகை வினாத்தாளுக்குரிய** (**"A" series Question paper with Tamil language in Part -B**) தற்காலிக விடைக்குறிப்பிற்கு இணையவழியில் ஆட்சேபனை (objection) தெரிவிக்கும்போது உரிய வழிமுறைகளைத் தவறாமல் பின்பற்றி அதற்குரிய சான்றாவணங்களை இணைக்க வேண்டும். சான்றாவணங்கள் இணைக்கப்படாத முறையீடுகள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அரசாணை நிலை எண்: 49 மனிதவள (M) துறையின் 23.05.2022 தேதியிட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மாற்றுத்திறன் படைத்த தேர்வர்கள் (PWD candidates) பகுதி-A-ல் உள்ள 01 முதல் 30 வரையிலான கட்டாயத் தமிழ்மொழி பகுதியின் வினாக்கள் எழுதுவதற்கு விலக்களிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் பகுதி-B-ல் வினா எண் 31 முதல் 150 வரை உள்ள வினாக்களுக்கு மட்டுமே ஆட்சேபனை தெரிவிக்கலாம். மேலும், பாடவல்லுநர்களின் முடிவே இறுதியானது என்று அறிவிக்கப்படுகின்றது.

நாள்: 28.03.2025 தலைவர்.